Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 209

சனிக்கிழமை
22 ஜூன் 2024

ஆனி 0
வள்ளுவ


முச்சந்தி முரளி



“உந்தப் பதின்மூண்டுப் பல்லவியைப் பாடிப்பாடியே காலத்தை ஓட்டிடுவினம் கண்டியளோ”

## இனப்பிரச்சினைக்குத் தீர்வாக
# 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துக



### சஜித்துடனான சந்திப்பில் ஜெய்சங்கர் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 22**

**இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.**

11



## மக்களிடம் பிரிவினையை ஏற்படுத்தவேண்டாம்!

### கல்லுண்டாயில் நேற்று பொதுமக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

இருவேறு நிர்வாக அலகுகளைக் கொண்டு பொதுமக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தவேண்டாம் என்று வலியுறுத்தி, கல்லுண்டாய் கிராமத்தில் நேற்றுப்

11



## முருங்கனில் கோரவிபத்து வயோதிபப் பெண் பலி!

### 14 பேருக்குக் காயம்

மன்னார், ஜூன் 22

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வு பாடுப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரி

11

## பதிவற்ற மோ.சைக்கிளில் பயணித்த ஒருவர் கைது!

### அவரிடமிருந்து 5 வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

பதிவற்ற மோட்டார்சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவரிடமிருந்து 5 வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டபோதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் அவருடைய வீட்டில் இருந்து 5 வாள்கள் கைப்பற்றப்

11

## யாழ். இளைஞரிடம் ரூ. 80 லட்சம் மோசடி!

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் 80 இலட்சம் ரூபா மோசடி செய்தமைக்காக லண்டனைச் சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அந்த லண்டன் வாசி, மேற்படி இளைஞரிடம் லண்டனில் உள்ள பல்பொருள் அங்காடியில் வேலை வாங்கித்

11

## சொகுசுக்கார் உரிமைமாற்றம்; சாரதி யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பெண்ணுக்குச் சொந்தமான சொகுசுக்காரை சட்டவிரோதமாக உரிமை மாற்றம் செய்ய முற்பட்டமைக்காக அந்தப்

11

### பாவனையாளர் அதிகாரசபை
## சுற்றிவளைப்பு எதிரொலி: 3,198,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 22

பாவனையாளர் அதிகாரசபையால் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது 31 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.

11

### நாகபூஷணியின் தேர்
## பணம் கொள்ளை கைதானார் யுவதி

யாழ்ப்பாணம், ஜூன் 22

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவில் பணத்தைக் கொள்ளையிட்ட யுவதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

35ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டமைக்

11

## வீட்டில் துன்புறுத்தல் என்று சிறுவன் பொலிஸில் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வீட்டில் தான் துன்புறுத்தப்படுவதாகத் தெரிவித்து சிறுவன் ஒருவன் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் தஞ்சமடைந்துள்ளான்.

கொழும்பைச் சேர்ந்த 16 வயதுடைய அந்தச் சிறுவன் தனது தாயாருடனும் தாயாரின் இரண்டாவது கணவனுடனும் வசித்து வந்துள்ளான். வீட்டில் ஏற்பட்ட துன்புறுத்தல்களைத் தொடர்ந்து அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து பொலிஸாரிடம் தஞ்சமடைந்துள்ளார்.

11

## 12 பவுண் நகைகள் நயினாதீவில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நயினாதீவில் உள்ள வீடொன்றில் இருந்து 12 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

11



### இளைஞருக்கு நீதிகோரி
## நெடுந்தீவு பொலிஸ் நிலையம்; சடலத்துடன் நேற்று முற்றுகை

### பொதுமக்கள் ஆவேசம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

நெடுந்தீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் படுகொலை செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதிகோரி, நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தை இளைஞனின் சடலத்துடன் முற்றுகையிட்டு பொதுமக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமுனைப் போட்டியில் ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, ஜூன் 22

**எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபருக்கு இடையில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் கொழும்பில் அரசியல் சூடுபிடித்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள்கள் நெருங்கிவரும் சூழலில் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகின்றது.

இலங்கை வரலாற்றில் மிகப் பிரதான தேர்தலாக இம்முறை நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தல் அமைய உள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை இலங்கை சந்தித்திருந்ததுடன், மக்கள் வாக்குகளால் தெரிவான ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, கடுமையான போராட்டங்களால் பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருந்தார். இதனால் இம்முறை மக்களின் மன நிலை பற்றிய தெளிவான கருத்துகளை எவராலும் கணிக்கமுடியாதுள்ளது. நாட்டில் மாற்றமொன்று அவசியம் என்பதையே அனைத்தின மக்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆளுங்கட்சியின் வேட்பாளராகப் பரந்துபட்ட கூட்டணியொன்றின் ஊடாக களமிறங்கவுள்ளார். எனினும் பொதுஜன பெரமுனவுடனான கூட்டணிப் பேச்சுகள் இறுதிப்படுத்தப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவும் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

அதேபோன்று பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேராவும் வேட்பாளராகக் களமிறங்கும் எண்ணத்தில் இருக்கிறார். ஆனால், அதற்குப் பொதுஜன பெரமுன இணங்கவேண்டும்.

சு.க.வின் வேட்பாளராக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச களமிறக்கப்படவுள்ளார். அதேவேளை மக்கள் போராட்ட முன்னணியின் வேட்பாளராக சரத் பென்சேகா களமிறக்கப்படவுள்ளார் என அறியமுடிகிறது. (ச-இ)

## ஈ.பி.எவ். விவரங்களைப் பேண டிஜிற்றல் தரவு அமைப்பு

### கோபா குழு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 22

மத்திய வங்கியும் தொழிலாளர் திணைக்களமும் இணைந்து ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட தரவுகளைப் பெறக்கூடிய டிஜிற்றல் தரவு அமைப்பைத் தயாரிக்குமாறு தொழிலாளர் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கக் கணக்குக் குழு அறிவுறுத்தியுள்ளது.

தொழிலாளர் திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக அரசாங்கக் கணக்குக்குழு, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் கூடியபோதே இதுகுறித்து விவாதிக்கப்பட்டது.

இதன்போது டிஜிற்றல் தரவு அமைப்பை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கீடுகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதும் ஊழியர் சேமலாப நிதியை செலுத்தத் தவறிய நிறுவனங்கள் மீது தற்போது 15,000 வழக்குகள் நிலுவையில் இருப்பதும் தெரியவந்தது. (ச-இ)

## கோத்தாவை விரட்டிய புதிய கூட்டணியில் பொன்சேகா களம்

கொழும்பு, ஜூன் 22

காலிமுகத்திடல் போராட்டக் குழுக்களால் உருவாக்கப்பட்டுள்ள 'மக்கள் போராட்ட முன்னணி'யின் வேட்பாளராக சரத்பென்சேகா களமிறக்கப்படவுள்ளார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியை ஆட்சியில் இருந்து விலக்கிய விவகாரத்தில் காலிமுகத்திடல் போராட்டக் குழு முக்கியமான பங்குவகித்திருந்தது.

அதன்படி, காலி முகத்திடல் போராட்டக் குழுவில் இடம்பெற்றிருந்த பிரதான அமைப்புகள் ஒன்றிணைந்து புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அண்மையில் கொழும்பில் உருவாக்கியிருந்தன.

அந்தப் புதிய கூட்டணியின் கீழ் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என அறியமுடிகின்றது. (ச-இ)



## பொசன் தினத்தில் ஐஸ்கிறீம் தானம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

பொசனை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காங்கேசன்துறையின் அலுவலகத்துக்கு முன்பாக உணவுகள் தானம் செய்யப்பட்டன.

25 கிலோ கடலை மற்றும் 1000 கோன் ஐஸ்கிறீம் என்பனவே தானம் செய்யப்பட்டன.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக்சி தனபால தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ச-26)



## தலைக்கனத்தில் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாததாலேயே சஜித் பிரேமதாஸவுக்கு எதிராகச் சேறுபூசும் நடவடிக்கையில் சரத் பொன்சேகா ஈடுபட்டுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியில் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் இருக்கையில் தியாகங்களுக்கு மத்தியிலேயே பொன்சேகாவுக்கு தவிசாளர் பதவி வழங்கப்பட்டது. எனினும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொன்சேகாவுக்கு ஆசை வந்துவிட்டது. ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதிவேட்பாளராகசஜித்தை களமிறக்க தீர்மானித்தது. இதனைத் தாங்கிக் கொள்ளமுடியாததாலேயே அரசுடன் இணைந்து சஜித்துக்கு எதிராக பொன்சேகா சேறுபூசும் பரப்புரை செய்கின்றார்- என்றார். (ச-44)

## போதையுடன் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22


யாழ். குருநகர்ப் பகுதியில் போதைப் பொருள்களுடன் ஐவர் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதில் 10 காற்போத்தல் சாராயத்துடன் ஒருவரும் 70 மில்லிகிராம் ஹெரோய்னுடன் இருவரும் கஞ்சா கலந்த மாவாவுடன் இருவருமே கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-26-66)

## யாழில் பொசனில் 14 கைதிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

பொசன் போயா தினமான நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 14 கைதிகள் மன்னிப்பின் கீழ் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றம் புரிந்து தண்டப் பணம் செலுத்தமுடியாது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளே விடுவிக்கப்பட்டனர். (ச-23)



## ஐ.தே.க.- தே.ம.ச. இரகசிய சந்திப்பு

கொழும்பு, ஜூன் 22

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்த்தன மற்றும் விஜித ஹேரத் ஆகியோரிடையே மாத்திரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு குறித்து இதன்போது வஜிர அபேவர்த்தன விஜித ஹேரத்திடம் வினவியதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்க ஒருபோதும் தேசிய மக்கள் சக்தி அனுமதிக்காது. இதனால் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பலைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கொள்ளநேரிடும் என்று விஜித ஹேரத் எச்சரித்துள்ளார். கடுமையான வாக்குவாதங்களுடன் இந்தச் சந்திப்பு நிறைவுபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தில் ரூபா 31,021 மில். மோசடி

## கோப் குழுவில் அம்பலம்

கொழும்பு, ஜுன் 22

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு 31 ஆயிரத்து 021 மில்லியன் ரூபா மேலதிக தரகுப் பணமாகச் செலுத்தப்பட்டமையால் பொதுமக்களுக்கு எரிபொருளுக்கான மேலதிகச் செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் அழைத்தபோதே இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன.

2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 3,416 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பில் விற்பனைப் பிரிவு உள்ளிட்ட உள்ளக அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும்.

அதன்படி, மோசடியில் ஈடுபட்டவர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் அந்த அதிகாரிகளின் முறைகேடுகள் குறித்து கூட்டுத்தாபனம் எடுத்த நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை 7 நாள்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் கோப் குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# தமிழகத்தினுள் நுழைந்த இலங்கையர்கள் கைது

கொழும்பு, ஜுன் 22

இலங்கையிலிருந்து கடல்வழியாக சட்டவிரோதமாக தமிழகத்துக்குள் நுழைந்த இரண்டு இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தை அடுத்த தனுஷ்கோடி கம்பிப்பாடு தெற்கு கடற்கரைப் பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். விசாரணையில் அவர்கள் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மண்டபம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-100)

# 'உறுமய' திட்டத்துக்கு நடமாடும் சேவை

கொழும்பு, ஜுன் 22

நாட்டில் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தும் வகையில், இம்மாதம் 26 முதல் 30 ஆம் திகதி வரையில் நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவையொன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச்செயலர் சந்திரா ஹேரத் தெரிவிக்கையில்,

இந்த நடமாடும் சேவை ஊடாக 2 மில்லியன் உறுதிகள் வழங்கப்படவுள்ளன .

'உறுமய' திட்டத்தின் கீழ் காணி உறுதிகளை மக்களுக்கு வழங்குவதற்காக சகல அதிகாரிகளும் நடமாடும் சேவையில் பங்கெடுப்பர். இந்தச்சேவையுடன் பதிவாளர் திணைக்களம், அளவையியல் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலக அதிகாரிகளும் கலந்துகொள்வர் - என்றார். (ச-6)

# ஜப்பான் தொற்றால் எமக்கு ஆபத்தில்லை

கொழும்பு, ஜுன் 22

ஜப்பானில் பரவிவரும் மனித சதையை உண்ணும் 'ஸ்ட்ரேப்டொகோகல் டொக்சிக் சொக் சின்ட்ரோம்'என்ற நோயை உருவாக்கும் பக்ரீரியா நாட்டுக்குள் வரும் ஆபத்துக் கிடையாது என சுகாதார இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவ நிபுணர் சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

இந்த பக்ரீரியா ஜப்பானில் பரவிவரும் நிலையில், அது தொடர்பான பாதிப்புகள் இலங்கைக்கு ஏற்படுமா? என நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இதனைத் தெரிவித்தார். கொரோனா வைரஸ் போன்று அல்லாது இந்த பக்ரீரியா பரவுவதைக் கட்டுப்படுத்தமுடியும்.

ஜப்பான் நாட்டவர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கும்போது அது தொடர்பில் தெளிவூட்டப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கஞ்சாவுடன் தேரர்கள் கைது

கம்பஹாவில் போதைப்பொருளுடன் இரண்டு தேரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கணேமுல்ல பிரதேச விகாரையிலுள்ள இரண்டு தேரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களின் பயணப் பொதிகளிலிருந்து 220 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# சட்டவிரோத மரக்குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றல்!

வவுனியா, ஜுன் 22



வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு விற்பனைக்காக வைத்திருந்த 20இலட்சம் ரூபா பெறுமதியான மரங்கள் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜய சேகரவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனையில் இந்தச் சட்டவிரோதச் செயல் கண்டறியப்பட்டது.

இதன்போது சுமார் 20இலட்சம் ரூபாவுக்கும் அதிகப் பெறுமதியான மரக்குற்றிகள் பல மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட மரங்களுடன் சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ச-18)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்சி தினம் தெரியுமோ?

பட்சியின் கண்ணிலபடுகிற பிரச்சினையளை நாலுபேருக்குத் தெரியட்டும் என்டு சொல்ல வெளிக்கிட்டா, நல்லதும் நடக்கும் போல இருக்குது. இப்ப கிட்டடியில அடுத்தடுத்து ரண்டு விசயங்கள் பட்சி சொல்லி, திருத்துப்பட்டிருக்கு.

ஒன்டு, பிரதேச சபையளில சிற்றூழியரா வேலை செய்யிறவையில ஆரும் பட்டதாரியள் இருந்தால் அவையின்ர விவரத்தை அனுப்பச் சொல்லி சுற்றுநிருபம் வந்ததும், அதைச் சில பிரதேசசபையளில கொம்புவைச்ச அதிகாரிமார் ஒளிச்சு வைச்சிட்டு, விவரம் அனுப்பாமல் இருக்கிறதையும் பட்சி வெளியில கொண்டுவந்தது. அதைப் பார்த்தபிறகுதான், மேல்மட்டங்களுக்கு இப்பிடியொரு வேலை நடக்கிறதெண்டது தெரியவந்திருக்குது. உடனேயே அவை எல்லாப் பிரதேச சபையளுக்கும் அவசரக்கடிதம் ஒன்டு அனுப்பியிருக்கினம். 'உங்கட பிரதேச சபையளில உள்ள சிற்றூழியர்களில ஆரும் பட்டதாரியள் இருந்தால் உடனடியா அவையைப்பற்றின விவரத்தை பக்ஸில அனுப்பவேணும். அனுப்பாட்டி கடும் நடவடிக்கை எடுப்பம்' என்டு வெருட்டுற மாதிரி வந்த கடிதத்தைக் கண்டிட்டு, பிரதேச சபையளில இருக்கிற கொம்பு முளைச்ச அதிகாரிமாருக்கு அடிவயிறு கலங்கத் தொடங்கிட்டுதாம்.

அடுத்தவை முன்னேறாமல் அலுவல் பாக்க நினைச்சவைக்கு, இப்பிடி அடிமடியில நெருப்பு பிடிச்சமாதிரி கடிதம் வந்தால் கலங்கத்தானே செய்வினம். உடனேயே அரக்கப்பரக்க வேலைசெய்து, எல்லா விவரத்தையும் உடனேயே அனுப்பிட்டினமாம். இதை அவையள் முதலே செய்திருந்தால், அவைக்குக் கீழ வேலை செய்யிற சிற்றூழியர்மார் நன்றியோட இருந்திருப்பினமெல்லோ. சிலருக்கு மாடுகள் சொன்னாக் கேக்காது மணிகட்டின மாடு சொன்னாத்தான் கேப்பினம் என்டது இந்தக் கொம்புமுளைச்ச அதிகாரியள் விசயத்தில சரியாப் போட்டுது. பட்சியின்ர புண்ணியத்தில தங்கட பிரச்சினை தீர்ந்திட்டுது என்டு சிலர் போன் பண்ணிச் சொல்லேக்க, மனசில கொஞ்சம் சந்தோசம் தான்.

அடுத்த விசயம், தர்மலிங்கத்தாரின்ர தூபி. சனத்துக்காக எவ்வளவோ நல்லதைச் செய்த தர்மலிங்கத்தாரின்ர தூபியைச் சுத்தி குப்பை கொட்டுறதைப் பார்த்து மனம் வெந்துபோய் பட்சி புலம்பினது உரிய ஆக்களின்ர காதில கேட்டிட்டுது போல. இப்ப தூபியடியில ஒரு கஞ்சல் கூட இல்லை. எல்லாம் கிளீனாக்கிப் போட்டினம். ஆனால் இதை ஒருநாளோட நிப்பாட்டாமல் தொடர்ந்து செய்யிறதுக்கு ஏற்பாடு செய்தால் நல்லது. தனியப் பிரதேச சபைதான் இதைச் செய்யோணுமெண்டில்லை. அக்கம் பக்கத்தில உள்ள சனங்களே ஒரு 'ரைம் ரேபிள்' போட்டு, அதைக் கூட்டிக்கொண்டு வந்தாலே அந்த இடமும் கிளீனா இருக்கும், அந்தாள் செய்த புண்ணியத்துக்கும் பெறுமதியா இருக்கும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுக மாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறை வேறும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுய ரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப் பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறை வேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உரு வாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்க ளிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம் :** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவி னர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்கு வார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உற வினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தி யோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சு மங்களை கற்று கொள்வீர்கள்.

ஒரு வழிப்பாதையாக

## வவுனியா மருத்துவமனை சுற்றுவட்ட வீதி விரைவில்

வவுனியா, ஜூன் 22

வவுனியா பொது மருத்துவமனை சுற்றுவட்ட வீதியை எதிர்வரும் வாரங்களில் ஒரு வழிப்பாதையாக மாற்றுவதற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது மருத்துவமனைக்குச் செல்லும் குறித்த வீதியில் நீண்டகாலமாக வாகனநெரிசல் ஏற்பட்டு வருகின்றது. இதனால் அந்த வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன் அம்புலன்ஸ்களும் சிரமத்துடனேயே பயணிக்கவேண்டியுள்ளது.

அந்தவகையில் வவுனியா கண்டிவீதி வழியாக வருகை தரும் பொதுமக்கள் வழமைபோல மருத்துவமனை சுற்றுவட்டத்தைப் பயன்படுத்தி மருத்துவமனை வீதியால் தமது பயணத்தை மேற்கொள்ளமுடியும். அத்துடன் பூந்தோட்டம் பகுதியில் இருந்து மருத்துவமனைக்கு வருகை தரும்மக்கள்கித்துள்வீதியையோஅல்லதுகுளவீதியையோ பயன்படுத்தி மருத்துவமனைக்குச் செல்லமுடியும்.

இதனை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம், நகரசபை, பிரதேசசெயலகம், பொலிஸார் ஆகியன இணைந்து கலந்துரையாடிய பின்பே தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ச-110)

## மஹோற்சவம்

சாவகச்சேரி, ஜூன் 22

சாவகச்சேரி அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் கோவில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஜூலை மூன்றாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# புத்தர் சொல்லினும்...

வடக்கு - கிழக்கில் இருந்து படைமுகாம்களையும், பொலிஸ் நிலையங்களையும் அகற்றி தமிழீழம் அமைப்பதற்குரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சிங்கள ராவய அமைப்பின் உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்திருக்கின்றார். தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரனின், கடந்த 18ஆம் திகதிய உரைக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடொன்றையும் அவர் பதிவு செய்திருக்கின்றார். கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிரான 'அரகலய' போராட்டக் காலத்தில் மௌனித்திருந்த பௌத்த பேரினவாதம், கடந்த சிலமாதங்களாக அதிதீவிரமாகத் தலைதூக்க எத்தனித்திருக்கின்றது. ஆற்று வெள்ளத்துக்கு இடப்படும் தடைகள், எவ்வாறு அந்த ஆற்றின் நீரோட்டத்தை அதிகரிக்கவும் ஒரு காரணமாக அமையுமோ, அவ்வாறுதான் 'அரகலய' காலத்துக்குப் பின்னரான பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரல்கள் அமைந்திருக்கின்றன. கம்மன்பில, வீரவன்ஸ, வீரசேகர உள்ளிட்ட பலரும் இந்த 'பௌத்த பேரினவாத' திணிப்பை-ஆக்கிரமிப்புமனோநிலையை-வெறுப்புணர்வு அரசியலை தம் முழுநேரத் தொழிலாக முழுமூச்சாக முன்னெடுத்துவரும் நிலையில், அக்மீமன தயாரத்ன தேரரும் தன்பங்குக்கு வினையாற்றியிருக்கின்றார். நாட்டில் இனித் தேர்தல் காலம். மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்று அடுத்தடுத்து பல தேர்தல்கள் வரவிருக்கின்றன. இவ்வாறான நிலையில், இலங்கையில் தேர்தலின் இலவச இணைப்பான பௌத்த பேரினவாத பரப்புரைகளும் - வெறுப்புணர்வுகளும் அடுத்தடுத்த நாள்களில் இன்னுமின்னும் தீவிரமாக முன்னெடுக்கப்படும். இதில் இரண்டாவது கருத்துக்கோ அல்லது மாற்று நிலைப்பாட்டுக்கோ இம்மியும் இடமில்லை.

13 ஆவது திருத்தம் எப்போதெல்லாம் பேசுபொருளாகின்றதோ, அப்போதெல்லாம் ஏதோ 13ஆவது திருத்தம் தனிநாட்டைத் தருவதுபோன்று, 'தமிழர்கள் தனிநாடு கோருவதன் அவசியம் என்ன?' என்று திரும்பத்திரும்ப விசமத்தனக் கேள்விகளையும், இழிநிலை அரசியலையும் முன்னெடுப்பது பௌத்த பேரினவாதப் பேர்வழிகளுக்கு வாக்குகளை அள்ளுவதற்கான மிகச் சுலபமான வழி. அத்தகையோருக்கு தமிழர்கள் தம்மைத் தாமே ஆள்கின்ற உரிமையை - உரித்தை எதற்காகக் கோருகின்றனர் என்பதற்கான பதிலைத்தான் அக்மீமன தயாரத்ன தேரரின் கருத்து மெய்ப்பித்து நிற்கின்றதே அன்றி, அவருடைய கருத்துகளில் தமிழர்கள் அச்சப்படவோ - தயங்கவோ -கிலிகொள்ளவோ போவதில்லை. ஏனெனில், இலங்கையின் பௌத்த பேரினவாத கடைநிலை வரலாற்றில் அக்மீமன தயாரத்ன தேரர் முதலாமவரும் அல்லர் - புதியவரும் அல்லர் - கடைசியானவரும் அல்லர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, தென்னாபிரிக்காவைப் பின்பற்றிய 'நீதிப்பொறிமுறை' முன்வைக்கப்படும். உண்மையைக் கண்டறியும் அந்த ஆணைக் குழுவின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படும்என்றுபகல்கனவுகண்டுகொண்டு, சர்வதேசத்துக்குப் பித்தலாட்டம் காட்டிக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்காவின் அரசியல் தலைவர்கள் ஒரு விடயத்தை உச்சப்புரிதலுடன் அணுகவேண்டும். தென்னாபிரிக்கா தன் நாட்டில் இடம்பெற்ற கறுப்பினப் படுகொலைகளுக்கு எதிரான நீதியாக, இனப்படுகொலையாளர்களைத் தண்டிப்பதற்கு முன்னர் 'மீண்டும் நிகழாமை' என்பதைத்தான் உறுதிப்படுத்தியது. இனி இந்த நாட்டில் இவ்வாறு நடக்காது என்ற நம்பிக்கையைத்தான் தென்னாபிரிக்கா முதலில் கொடுத்தது. அதன்பின்னர்தான் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். 'வடக்கு - கிழக்கில் தமிழீழம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன' என்ற அக்மீமன தயாரத்ன தேரரரின் கருத்து, மீண்டும் பழைய இருண்ட காலம் திரும்பிக் கொண்டிருப்பதையே உணர்த்துகின்றது. இதுவா [illegible] தென்னாபிரிக்காவிடம் இலங்கை கண்டறிந்த உண்மை? 'நாய்வாலை [illegible] நிமிர்க்கமுடியாது' என்பர் உண்மைதான். புத்தரே சொல்லினும் பேரின[illegible]ின் வாலையும் நிமிர்த்தமுடியாது. நிமிரா வாலுடன் அவர்கள் இனவாதக் குரைப்பை தொடரவே செய்வர்...!



இலங்கையுடனான

# அபிவிருத்தி ஒப்பந்தங்கள் இந்தியா கடும் அதிருப்தி

**கொழும்பு, ஜூன் 22**

**இந்திய அரசின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் கூட்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கு தடையேற்படுவது குறித்து இந்திய அரசு கவலை வெளியிட்டுள்ளது.**

இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் இடம்பெற்ற இருதரப்புக் கலந்துரையாடலின்போது இந்திய-இலங்கை அபிவிருத்தி ஒப்பந்தங்கள் குறித்து ஆராயப்பட்டபோதே இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் யார் பதவிக்கு வந்தாலும் இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்தக்கூடாது. அவை இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டங்களே என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

# பெண்கள் வலுவூட்டல் சட்டவரைவு நிறைவேற்றம்

கொழும்பு, ஜூன் 22

பெண்கள் வலுவூட்டல் சட்டவரைவு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற பெண்கள் வலுவூட்டல் சட்டவரைவு இரண்டாம் வாசிப்பு விவாதத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

பெண்களின் நலனுக்காக முன்வைக்கப்படும் இந்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. அதனையடுத்து சட்டவரைவில் ஏற்பாடுகள் தொடர்பில் எதிரணியின் உறுப்பினர்கள் முன்வைத்த திருத்தங்கள் வாதப் பிரதிவாதங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன. (ச-இ)



## விசேட தரத்துக்கு முதல் தமிழராக குயின்ரஸ் தெரிவு

கொழும்பு, ஜூன் 22

இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிவிசேட தரத்துக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் தேசிய ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் கல்வி நிர்வாகசேவை அதிவிசேட தரத்துக்கு ஐந்து ஆளணி வெற்றிடங்களே இருந்துள்ளன.

இந்த நிலையில் முதன்முறையாகதமிழர் ஒருவர் இலங்கை கல்வி நிர்வாகசேவை அதிவிசேட தரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டமை இதுவேமுதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

## 10 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

கொழும்பு, ஜூன் 22

சீரற்ற காலநிலை காரணமாக 10 மாவட்டங்களில் டெங்கு வேகமாகப் பரவி வருகிறது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவுஎச்சரிக்கைவிடுத்துள்ளது.

அதன்படி கடந்த 24 மணி நேரத்தில் 161 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இம் மாதம் 20 நாள்களுக்குள் நாட்டில் 2 ஆயிரத்து 44 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## நெல் கொள்வனவுக்கு சலுகை வட்டியில் கடன்

கொழும்பு, ஜூன் 22

இந்த வருடத்தின் பெரும்போக மற்றும் சிறுபோக நெல் கொள்வனவுக்காக சலுகை வட்டி வீதத்தின் கீழ் வங்கிகள்மூலம் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி வங்கிகள் மூலம் 6 ஆயிரம் மில்லியன் ரூபா சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்கப்படவுள்ளது. (ச-இ)

**நாளை**

**23.06.2024**

**ஞாயிற்றுக்கிழமை**
**ஆனி - 09**
[illegible] : 08.54 - 10.24
ராகுகாலம் : 04.24 - 08.54


**நாளொரு நல்வார்த்தை**

**மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகி விடும்.**

**- பெர்னார்ட்ஷா-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 18.05.1950 மறைவு : 23.05.2024

## அமரர் வெள்ளையன் சுப்பிரமணியம்

(ஓய்வு நிலை எழுதுவினைஞர், பனை தென்னை வள அபிவிருத்தி சங்கம் சாவகச்சேரி)

அன்பின் சிகரமே
வாழ்வின் ஒளி விளக்கே, எம் குடும்பத் தலைவனே!
எம் வாழ்வின் வழிகாட்டிய தீபமே!
காற்றிலே கலந்து நாட்கள் முப்பத்தொன்று ஆனாலும்
காலடி தழைக்கும் உம் நினைவுகள்.
எம் மனத்திரையினுள்ளே முளையரும்பி கொடியாய்
மலர்ந்து மணம் வீசியபடி என்றும் இருப்பீர்கள்
தோழிலே தெளித்த பாசத்தூறல்கள்..........
வாழ்வில் ஆயிரமாயிரம் கண்கள் ஒரம்
கண்ணீர்த் துளிகளாய் நீங்கள்
தீண்டும் பொருளெல்லாம் நீங்கள்தானே ஐயா.....
மறைந்து மாதமொன்று ஆனபோதும் சிறகிழந்து
தவிக்கின்றோமே.....
ஐயா ...... உங்கள் நினைவலைகள் என்றும் எம் நெஞ்சினில்
நீங்காமல் நிலைத்திருக்கும்.........
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொன் நாகமணி வீதி
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 792) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 24.07.1936



மறைவு 21.06.2024

## பிறிம்ரோஸ் றஞ்சிதமலர் குணரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை மானிப்பாய் இந்துக்கல்லூரி, வேம்படி உயர்தர பாடசாலை)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிறிம்ரோஸ் ராசமலர் குணரத்தினம் நேற்று (21.06.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - சுகிர்தரத்தினம் தம்பதியரின் பாசமிகு புதல்வியும், கிடாடிஸ், ராசமலர், ஜோசப் அவர்களின் பாசமிகு தங்கையும், அரசரட்ணம், ஜோசப் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு தாவடி கிறிஸ்தவ மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜனனி தபோதரன்
077 466 0276, 071 642 1727
செல்வன் ஜெயக்குமார் கௌசிகன்
077 197 5991

CCTM பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(CS/55456) L-1

## வேலைக்கு ஆள் தேவை

வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 074 179 3394

## உடனடி வேலைவாய்ப்பு

யாழில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கம்பனிக்கு வட மாகாணத்தில் அலுவலக உத்தியோகத்தர்கள் உடன் தேவை ஆண்/பெண் தகமையுடையவர்கள் தேவை

தொடர்பு: 076 112 4145, 071 786 8589

"திடலெங்கும் திசை பரப்பிட"

# கைதையூர் பெருவிழா - 2024

(கைதடி பிரதேச பதின்மூன்று சனசமூக நிலையங்கள், மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், முன்பள்ளிகள், கல்விக்கழகங்கள், கலைக்குழுக்கள் இணைந்த விழா)

- காலம் :: 22.06.2024 (சனிக்கிழமை)
- நேரம் : மாலை 6.00 மணி
- இடம் : கைதடி மத்திய விளையாட்டு மைதானம்

**தலைமை**

**திரு.அ.கயுந்தன்** அவர்கள்
(விழாக்குழு, கைதையூர் பெருவிழா-2024)

**பிரதம விருந்தினர்**

**திரு. ஈஸ்வரபாதம் சரவணபவன்** அவர்கள்
(தலைவர்- உதயன் குழுமம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - யாழ். தேர்தல் மாவட்டம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

**திரு. சிவசம்பு மதியழகன்** அவர்கள்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர் - வலிகாம கல்வி வலயம்)

**திருமதி வசந்தமாலா மனோகரன்** அவர்கள்
(கணக்காளர், மாநகர சபை - யாழ்ப்பாணம்)

**திருமதி கார்த்திகாஜனி ஸ்ரீசனத்** அவர்கள்
(கணக்காளர், நகரசபை - சாவகச்சேரி)

**திரு. கதிர்காமநாதன் சந்திரகுமார்** அவர்கள்
(செயலாளர், பிரதேச சபை - சாவகச்சேரி)

**கௌரவ விருந்தினர்கள்**

**திரு. நாகலிங்கம் சத்தியநாதன்** அவர்கள்
(சட்டத்தரணி, ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் - சாவகச்சேரி)

**திரு. வேதநாயகம் தபேந்திரன்** அவர்கள்
(ஓய்வு நிலை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் - கிளிநொச்சி)

## நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம் - யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்கள்
- தமிழ்மொழி வாழ்த்து - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவர்கள்
- கொடியேற்றல் - நிலையத்தலைவர்கள்
- வரவேற்புரை - திரு. கு.சுரேஷ்குமார்
- வரவேற்பு நடனம்
- தலைமையுரை - திரு. அ.கயுந்தன்
- கௌரவ விருந்தினர்கள் உரை
- பரிசளிப்பு - முகிழும் விழா
- சிறப்பு விருந்தினர்கள் உரை
- பரிசளிப்பு - கலாசார விழா
- பிரதம விருந்தினர் உரை
- பரிசளிப்புக்கள் - கல்வி மேம்பாட்டு விழா. பண்பாட்டு விழா
  கைதையூரான் விருது வழங்கல்
  பிரதேச விளையாட்டு விழா
- நன்றியுரை - திரு. தி.சக்தியதீபன்
- கைதையூர் கலைச்சங்கமம்

- விளையாட்டு குழு:
  திரு. சு.கேதீஸ்வரன்
  திரு. சி. சுவர்ணன்
  திரு.பே. அனோயன்
- கல்வி, கலாசார குழு:
  சி. மதீசன்
  அ. செந்தாரன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**விழாக்குழு - 2024**

- சனசமூக நிலையங்கள்
- மாதர் கிராம அபிவிருத்திச் [illegible]ங்கங்கள்
- விளையா[illegible]ட்டுக்கழகங்கள்
- கலைக்குழுக்கள்
- முன்பள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க எம்.பி.க்கள் குழு தலாய்லாமாவுடன் சந்திப்பு

## சீனா கடும் அதிருப்தி

**லண்டன், ஜூன் 22**

**சீனாவின் எச்சரிக்கையை மீறி அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரம்சாலாவில் உள்ள தலாய்லாமாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.**



சீனாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட திபெத்திய ஆன்மீகத் தலைவரான தலாய்லாமா இமாச்சலப் பிரதேசத்தின் தரம்சாலாவில் தங்கி இருக்கிறார். 1959ஆம் ஆண்டு திபெத்தில் இருந்து தப்பி வந்த அவருக்கு இந்தியா அடைக்கலம் அளித்துள்ளது.

தலாய்லாமாவை சந்திக்க செல்வாக்கு மிக்க அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 7 பேர் தரம்சாலா சென்றுள்ளனர்.

திபெத் பிரச்சினைக்குத் தீர்வு காண சீனாவுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் அமெரிக்கா இயற்றியுள்ள சட்டவரைவு ஜனாதிபதி ஜோ பைடனின் கையொப்பத்துக்காகக் காத்திருக்கும் நிலையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

தலாய்லாமாவை ஆபத்தான பிரிவினைவாதி என்று குறிப்பிடும் சீனா, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு, திபெத் தொடர்பான சட்டவரைவு என்பன தொடர்பில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது. (எ-இ)



# ரஷ்ய அதிபர் புடின் வியட்நாம் பயணம்

மொஸ்கோ, ஜூன் 22

ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் வியட்நாமுக்குப் பயணம் மேற்கொண்டு அங்கு பலதரப்பட்ட தலைவர்களையும் சந்தித்துள்ளார்.


பொருளாதாரம், கல்வி மற்றும் எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைசார் விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்புகளின் போது கலந்துரையாடப்படவுள்ளது என்று ரஷ்ய வெளிவிவகாரத்துறை அறிவித்துள்ளது.

24 ஆண்டுகளின் பின்னர் வடகொரியாவுக்குச் சென்றிருந்த புடின், வடகொரியாவுடன் இராணுவக் கூட்டணி தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னணியில், அங்கிருந்து அவர் வியட்நாமுக்குச் சென்றுள்ளமையானது போர்க் கூட்டணியின் விரிவுபடுத்தலா? என்ற கேள்வியையும் தோற்றுவித்துள்ளது என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். அதே வேளை ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்றாக வியட்நாம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இராணுவத்தை நகர்த்திய ரஷ்யா

பின்லாந்து எல்லையில் குவிக்கப்பட்டிருந்த படைகளில் 80 சதவீதத்தை ரஷ்யா, உக்ரைன் நோக்கி நகர்த்தியுள்ளது என்று பின்லாந்து புலானாய்வுத்துறையை மேற்கோள்காட்டி அந்த நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யா, பின்லாந்து எல்லையிலும் இராணுவத் தளங்களை அமைத்து வீரர்களை குவித்திருந்தது. தற்போது அங்கிருந்து இராணுவத்தை ரஷ்யா நகர்த்தியுள்ளது என்று கூறப்படுகின்றது. உக்ரைன் மீதான தாக்குதல்களுக்கு மேலதிக இராணுவம் தேவை என்பதால் இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. அதேவேளை, பின்லாந்து எல்லையில் ரஷ்ய இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதால் அங்கும் பதற்றமான நிலைமையே காணப்பட்டது. (எ-இ)





வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன்

பூங்காவன உற்சவம் - 22.06.2024

மேற்படி திருவிழா இன்று (22.06.2024) சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி தொடர்ந்து பிள்ளையார் முருகன் சகிதம் அம்பாள் அழகிய முத்துப் பந்தலில் வீதி உலா வருவார்

தவில் நாதஸ்வரக் கச்சேரி

- ஆஸ்தான வித்துவான் - சுதாகுழுவினர் கட்டைப்பிராய்
- நாதஸ்வரம் - பஞ்சாபிகேசன் விக்கினேஸ்வரன்
  இந்தியாவிலிருந்து விசேடமாக அழைக்கப்பட்ட பெங்களூர் ராமு தஞ்சாவூர் கணேஸ், பவநாத்
- தவில் - சுப்பிரமணி, தம்பன், கவி, சச்சின்



பூங்காவன நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குபவர்
வர்ணனைக் கலாநிதி
மதுரகவி காரை எம்.பி
ஆருளானந்தன் M.A

ஒளி (லைற்)
நவா லைற
பிரான்பற்று
பிரான்பற்று பண்டத்தரிப்பு

ஒலி (சவுண்ட்)
தேவன்ஸ் சவுண்ட்ஸ்
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

மேடை அலங்காரம்
கஜீபன் மேடை அலங்காரம்
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

இராப்போசனம் வழங்கப்படும்

உபயகாரர்:
- New Ram Construction - கட்டடக் கலையின் முன்னோடி
- Hotel Lovusiyah (Pvt) Ltd - உல்லாச விடுதி
- JLS Mithiraa (Pvt) Ltd - நகை அடைவு சேவை

தேவஸ்தானம்
22.06.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பி. கட்சியின் அமைப்பாளர் எரிகாயங்களுடன் சிகிச்சையில்

ஈ.பி.டி.பி. கட்சியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளராகச் செயற்பட்டு வரும் பவானி எனப்படும் சரவணபவானந்தன் சிவகுமார் தீயில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி வத்திராயனில் தனியாக வசித்துவந்த அவர் தீக்காயங்களுடன் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்திற்கான காரணம் உடனடியாகத் தெரியவராத நிலையில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-26-66-27-100)

## கருத்தாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் சிறப்பிதழாக வெளிவந்துள்ள கந்தபுராணக் கலாசாரத்தின் கலங்கரை விளக்கம், காசிவாசி செந்திநாதையர் நூற்றாண்டுச் சிறப்பிதழ் பற்றிய கருத்தாடல் நிகழ்வு அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் சிறப்புரையையும், யாழ்.பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் கருத்துரையையும் ஆற்றவுள்ளனர். (ம-25-66)

## சிறுமியுடன் குடித்தனம் இளைஞர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 22

15 வயது சிறுமியுடன் குடும்பமாக வாழ்ந்துவந்த இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமி மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இளைஞனிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில், அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-125)

## மாணவருக்கு வழிகாட்டல்

யாழ்., ஜூன் 22

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்கின்ற தீவக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு கனடாவின் அறிவகம் தமிழ்க் கல்வி நடுவம் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். வேலணை மத்திய கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ம-22-66)

## அருணகிரிநாதர் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 22

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் அருணகிரிநாதர் பெருவிழா சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஆசிரியர் இ.வாகீசன் தொடக்கவுரை ஆற்றுவார். யாழ்.பல்கலைக்கழக முன்னாள் இசைத்துறைத் தலைவர் கலாநிதி நா.வி.மு.நவரத்தினம் 'அருணகிரியான்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். திருப்புகழிசை மற்றும் பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெறுமென ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ச-25-66)

## யாழ்ப்பாணம் - கதிர்காமம் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் - கதிர்காமம் பாதயாத்திரை எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிலையான சமாதானத்துக்கான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்தப்பாதயாத்திரை இடம்பெறவுள்ளது. (ச-100)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

**தனியார் கல்வி நிலையம் - சங்கானை**
**விரும்பிய பாடத் தெரிவு, அனுபவம் மிக்க ஆசிரியர்கள், ஒரு பாட மாதக் கட்டணம்.**
O/L மாணவர்களுக்கு - 150/-
A/L மாணவர்களுக்கு - 600/-
**குபேரன் கட்டட மாடி, சங்கானை.**
Tel : 077 675 1649
(CS/55448) J-1

## வேலையாள் தேவை

அலுமினியம் தொழிற்சாலைக்கு ஸ்பின்னர் வேலையாள் (பெரிய பானை போடக்கூடியவர்) தேவை.
தொடர்புகளுக்கு
021 222 9393, 077 193 1570
(CS/55413) J-1

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகர சபை எல்லைக்குள் நல்லூர் நாயன்மார்கட்டில் செம்மணி வீதிக்கு அருகில் இராமநாதன் வீதியில் 1 பரப்பு 12.5 குழி (1 துண்டு) அல்லது 3 பரப்பு 7 குழி (2 துண்டு) **விற்பனைக்கு உண்டு.** நல்லூர் கோவிலிலிருந்து 2Km. மிகச் சிறந்த நீர், நில வளம் உள்ள காணி.
தொடர்பு:- 077 514 9210
(CS/789) J-1

## வேலைவாய்ப்பு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- சாரதி (Driver) வயது எல்லை 25 -35
- Computer Billing (ஆண்,பெண்)
- பொதிசெய்பவர்

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-
077 419 5015, 021 221 2770
(CS/7791) J-1

## வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு

கந்தரோடை ஸ்கந்தா பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப் படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 417 9120, 076 358 2126, 076 225 4729
Whats app:- 0091 915 954 0807
(CS/55418) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து 1977ம் ஆண்டு உத்திரட்டாதி மீனம் கி.பா. 17 1/4 சொந்தமாக தொழில் செய்யும் **மணமகனிற்கு மணமகள் தேவை.** தரகர் தேவையில்லை.நேரடித் தொடர்பிற்கு
076 860 5172
(CS/55447) J-1

## ANNUAL GENERAL MEETING

**The Vembadi Girls' High School Old Girls' Association**

The Annual General Meeting will be held as scheduled below:

Date : 7 July 2024
Time : 9.00 am
Venue : Trimmer Hall
Vembadi Road, Jaffna.
(Opposite to the road between Jaffna Central College and Central playground)

All members of Vembadi Girls' High School Old Girls Association, Jaffna are welcome.

New members are welcome to JOIN our ASSOCIATION at the AGM or online https://www.facebook.com/VOGAJaffna

The Secretary
(CS/8130) J-1

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி குருநாதி



பிறப்பு 19.02.1940 இறப்பு 20.06.2024

துன்னாலை மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குருநாதி அவர்கள் நேற்று முன்தினம் (20.06.2024) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், மைனாவதி (Germany), மலர்விழி (Sri lanka), முருகதாஸ் (Germany), சிவதாஸ் (Germany), மான்விழி (England), குகலன் (Canada) ஆகியோரின் அன்புத்தந்தையும், கேசவன், காலஞ்சென்ற செல்வராசா, அனுசா, ரவிச்சந்திரன், நந்தினி ஆகியோரின் மாமனாரும், கேடீஸ்வரன், துசியா, நிரோஜன், மயூரன், சபிந்தன், தனுஜன், ஜென்ஸி, கெனீவன், அஸ்வினி, அனுசா, அகல்யா, ஆகாஸ், அபினாஸ், ஆர்த்தி, ஆரன், அபீனா ஆகியோரின் அன்பு பேரனும் மற்றும் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்னாலை மேற்கு,
கரவெட்டி

தகவல் : குடும்பத்தினர்.
தொடர்பு: 077 614 0065
(CS/28141) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில், இங்கிலாந்தைத் தோற்கடித்தது தென்னாபிரிக்கா அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக குயின்டன் டி ஹொக் 65 ஓட்டங்களையும், மில்லர் 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ஹரி புரூக் 53 ஓட்டங்களையும், லிவிங்ஸ்டன் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். (ம)



பொசன் பண்டிகையை முன்னிட்டு 125க்கும் மேற்பட்ட கண்நோயாளர்களுக்கு மருத்துவ கலாநிதி மலரவனின் தலைமையில் கண்புரை சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. யாழ். நாகவிகாரையின் விகாராதிபதி தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-22-26)

# ஜனாதிபதியின் உரை ஜூலை முதல் வாரத்தில்

கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஜூலை முதல் வாரத்தில் உரையாற்றுவார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.


இந்த உரையில் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தும் ஜனாதிபதி, எதிரணி உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கவுள்ளார்.

இந்த அழைப்பின் பின்னரே எதிரணி உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதிக்கு தமது ஆதரவை தெரிவித்து, அவருடன் சங்கமிப்பார்கள் எனவும் அறியமுடிகின்றது.

அதேவேளை பாரிஸ் கிளப், சீனா உள்ளிட்ட தரப்புகளுடன் இறுதிக்கட்ட ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர், இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது என்ற அறிவிப்பை ஜூன் 27 ஆம் திகதி ஜனாதிபதி வெளியிடவுள்ளார் என்றும் அதனைப் பெரும் வெற்றியாகக் கருதி நாடு முழுவதும் நிகழ்வுகளை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது. (ச-25-44)


## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 12 . 1945



மறைவு 19 . 06 . 2024

**செல்லத்துரை கணேசமூர்த்தி**

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கணேசமூர்த்தி அவர்கள் (19.06.2024) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், குலக்கொழுந்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், கபிலன் (பிரான்ஸ்), கஸ்தூரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியப்பிரியா (பிரான்ஸ்), கஜேந்திரன் (நிக்கொலா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், இரத்தினேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), இராஜேஸ்வரி, சிவேஸ்வரி, காலஞ்சென்ற யோகேஸ்வரி (பிரான்ஸ்) மற்றும் விமலச் சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோரனும், ஹரிணி, பிறேமஸ்வரூபா, பிரஷாந்தி வாஹினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்கக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


உலவிக்குளம் பிள்ளையார் கோவிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

077 424 8765



## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 02 . 1940



மறைவு 19 . 06 . 2024

**பொன்னம்பலம் கனகரத்தினம்**

**(இளைப்பாறிய ஓவசியர், இலங்கை மரக்கூட்டுத்தாபனம்)**

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கனகரத்தினம் கடந்த 19.06.2024 புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னார்சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - யோகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கலாவதியின் அன்புக் கணவரும், சசி (நோர்வே), விஜி (நோர்வே), பாலன் (நோர்வே), காலஞ்சென்ற ஜெகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சதா சிறிதரன், அகிலன், யாழினி ஆகியோரின் மாமனாரும், செந்தூரன், சதா சேயோன், மிதிலன், மஞ்சரி, சப்தகி, நர்த்தகி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, மாவீரர் சத்தியானந்தன் (கிளி) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ராஜலக்சுமி மற்றும் குணவதி ஆகியோரின் மைத்துனரும், பேபிரஜி, சுரேஸ், சுதா, சுகன்யா, சுதர்சன், சுகிர்தன் ஆகியோரின் சித்தப்பாவும், தமிழரசி, உதயன், மாவீரன் சிவக்குமார் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இல. 35 விபுலானந்தர் வீதி, அரியாலை "ஆறுபடைவீடு" இல்லத்தில் இடம்பெற்று காலை 10.00 மணிக்கு தகனக்கிரியை களுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
பாலன்(மகன்) : 00 94 (77) 255 2555,
00 47 966 66 666 (நோர்வே)
சசி (மகன்) : 00 47 450 43 743 (நோர்வே)
விஜி (மகன்) : 00 47 412 93 946 (நோர்வே)
சதா சிறிதரன் (மருமகன்) : 00 479 582 8859
அகிலன் (மருமகன்) : 00 479 099 2062

தகவல்:
குடும்பத்தினர்.
ஒஸ்லோ, நோர்வே.

(CS/55453) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையாகாமல் வாழ்வைப் பெறுமதியாக்குங்கள்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் அறிவுரை

கிளிநொச்சி, ஜூன் 22

**போதைப்பொருள்களுக்கு அடிமையாகும் சமூகப் பிறழ்வு நடத்தையுடைய சமூகமொன்று உருவாகிவருகிறது. அதிலிருந்து பாதுகாப்புப் பெற்று சிறந்ததொரு எதிர்கால சந்ததியை நிலைநாட்ட போதை எனும் கொடிய அரக்கனுக்கெதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும்.**

-இவ்வாறு முழங்காவில் மகா வித்தியாலயம் மற்றும் ஜெயபுரம் மகா வித்தியாலய மாணவர்களுக்கான போதைப்பொருள் மற்றும் துஷ்பிரயோக தடுப்பு நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொண்ட பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள்களிலுள்ள இரசாயனம் மூளையின் நரம்புக்கணத் தாக்க செயன்முறையில் பாதிப்பை ஏற்படுத்தி மனஅழுத்தம், தொடர்பாடல் சிக்கல்கள், ஆளுமைப் பிறழ்வுகள், தற்கொலை எண்ணங்கள், சுய கௌரவமின்மை, கவனஞ்செலுத்த முடியாமை, ஞாபகத்திறன் இழப்பு, கற்றலில் நாட்டமின்மை, சமூக உறவிலிருந்து விலகுதல், குற்றச்செயல்கள் மற்றும் சமூக விரோதச் செயலில் ஈடுபடுதல் போன்றவற்றை ஏற்படுத்திவிடுகின்றது.

அத்துடன் இதயநோய், சிறுநீரகக் கோளாறுகள், நரம்பு சார்ந்த வலுவின்மைகள், ஈரலில் பாதிப்பு மற்றும் புற்றுநோய் எனும் நோய் நிலைகளையும் ஏற்படுத்தி உயிரைப் போக்கி விடுகின்றன.

எனவே நாம் இதிலிருந்து பாதுகாப்புப் பெற்று சிறந்ததொரு எதிர்கால சந்ததியை நிலைநாட்ட போதை எனும் கொடிய அரக்கனுக்கெதிராக ஒன்றிணைந்து போராடவேண்டும்.

உங்களுக்குக் கிடைத்த அழகியவாழ்வை பெறுமதியுள்ளதாகவும் தரமானதாகவும் வடிவமைத்துக் கொள்ள முயலும்போது நீங்கள் எதிர்கால சமூகத்தின் சிற்பிகளாகத் திகழுவீர்கள் - என்றார். (ச-9-100)



# குடமுருட்டிக் குளத்தின் வான் கதவை மூடுக

## அறுவடை பாதிப்பென விவசாயிகள் அந்தரிப்பு

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி குடமுருட்டிக்குளம் திறந்து விடப்பட்டதன் காரணமாக அறுவடைக்குத் தயாரான வயல் நிலங்களில் நீர் நிறைந்து பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குளத்தின் கீழ் 300 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைகள் நடைபெறுகின்றன.

இந்தநிலையில் கமக்கார அமைப்புகளின் ஆலோசனையின்றி குளத்தின் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை அறுவடை நேரத்தில் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25-13)



# திஸ்ஸ விகாரைக்கெதிராக நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராகத் தொடர் போராட்டமானது நேற்று வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரையானது பொதுமக்களது காணிகளை அபகரித்து அனுமதியின்றி அமைக்கப்பட்ட இந்த சட்டவிரோத விகாரையை அகற்றுமாறு கோரி ஒரு வருட காலமாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு குறித்த விகாரையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும்முகமாக இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனபலர் கலந்துகொண்டனர். (ச-27)

# ஒருவழி சென்றால் பின்னடைவே!



கொழும்பு, ஜூலை 22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் இரு கட்சிகளுக்கும் பின்னடைவு ஏற்படக்கூடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஆசியுடன் களமிறங்கினால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார். அவ்வாறு இல்லாவிட்டால் தோல்வியே ஏற்படும்.

ரணிலை பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிக்கு மொட்டுக் கட்சியே கொண்டுவந்தது. இரு தரப்புக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் பேச்சுமூலம் தீர்க்கப்படவேண்டும். தனிவழியில் சென்றால் இரு தரப்புகளுக்கும் பின்னடைவு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# இந்தாண்டுக்கான உ/த பரீட்சை விண்ணப்பம் கால அவகாசம் ஜூலை 10

கொழும்பு, ஜூன் 22

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை 10 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic மற்றும் உத்தியோகபூர்வ கையடக்கத்தொலைபேசி செயலியான 'DoE' இனைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.


அரச மற்றும் அரச அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகளின் விண்ணப்பதாரிகள் அந்தந்த பாடசாலை தலைமையாசிரியரிடம் அனுமதி பெற்ற பின்னரே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாது என்றும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# நீரிழிவுச் சோதனை இலவச முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு நோய் தொடர்பான இலவச பரிசோதனை முகாம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இ.போ.ச. மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வை இலங்கை போக்குவரத்து சாலை பிரதான முகாமையாளர் க.கேதீசன் ஆரம்பித்து வைப்பார். இதன்போது நீரிழிவுப் பரிசோதனை, குருதி அமுத்தப் பரிசோதனை, உடல் திணிவு சுட்டி கணித்தறிதல், நீரிழிவு நோயாளர்களுக்கு நீரிழிவுக் கைநூல் வழங்கல் என்பன இடம்பெறும். (ச)

# கசிப்புடன் ஒருவர் கைது



சுழிபுரம் பெரியபுலோவில் கசிப்புடன் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் விசேட ரோந்து நடவடிக்கையில் அவர் சிக்கினார்.

அவரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பை பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# ஊர்காவற்றுறையில் மாதா சிலை உடைப்பு

ஊர்காவற்றுறையில் மாதா சிலையொன்று உடைக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை கரம்பன் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மாதா சுரூபம் ஒன்றே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 13 ஆம்...

ஒருநாள் பயணமாக நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வந்திருந்த ஜெய்சங்கர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். எதிர்க்கட்சித் தலைவருடனான சந்திப்பின்போதே இந்தக் கருத்தை ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

அண்மையில் வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சஜித், தான் ஆட்சிக்கு வந்தால் 13ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்திருந்த நிலையில், சஜித்தின் நிலைப்பாட்டுக்குத் தனது ஆதரவையும் வரவேற்பையும் ஜெய்சங்கர் தெரிவித்தார். அத்தோடு சஜித் வெறும் வார்த்தையோடு நிற்காமல் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, நிரோசன் பெரேரா, பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்திய - இலங்கை உறவை வலுப்படுத்துவது குறித்தும், அதற்கு ஆதரவளிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (அ-ம-6)

### மக்களிடம்...

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூண்டாய் குடியேற்றத் திட்டத்தின் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளை ஒன்றாக்கக் கோரியும் பிரத்தியேகமாக அமைக்கபடும் பொதுநோக்கு மண்டபத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர இடமாற்றக்கோரியுமே மானிப்பாய் கல்லூண்டாய்வெளி குடியேற்றத் திட்ட மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"கல்லுண்டாய் வெளியில் கடந்த 2019 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் ஜே/135 மற்றும் ஜே/136 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் ஒரே சனசமூகக் கட்டமைப்பின் கீழேயே அனைவரும் செயற்பட்டு வந்தோம். ஆனால், தற்போது பொதுநோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு மக்களைப் பிரித்தாள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தப் பொதுநோக்கு மண்டபம் அனைவருக்குமானதாக அமைக்கப்படவேண்டும். அத்துடன், மக்கள் மத்தியில் பிரிவினைகளை வளர்க்கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (அ-ம-125-20-27)

### சொகுசுக்கார்...

பெண்ணின் சாரதியாகக் கடமையாற்றிய இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புகைப்பரிசோதனை மேற்கொள்வதற்காக காரின் புத்தகத்தைத் தருமாறு அவர் கோரியுள்ளார். அந்தப் பெண்ணும் புத்தகத்தைக் கொடுத்ததையடுத்து. அந்த இளைஞர் காரை சட்டவிரோதமாகத் தனது பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய எத்தனித்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழுவிடம் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அந்த இளைஞனைக் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர். அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதிமன்றம் அவரைப் பிணையில் விடுவித்ததுடன், நீதிமன்றம் ஊடாக அந்தப் பெண்ணின் காரும் புத்தகமும் அவரிடமே பாரப்படுத்தப்பட்டன. (அ-ம-26)

### முருங்கனில்...

ருந்தார். ஹைஏஸ் ரக வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. கல்முனையில் இருந்து மன்னார் மறிச்சுக்கட்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனமே இவ்வாறு மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் காயமடைந்த அனைவரும் முருங்கன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். வாகனத்தில் பயணித்தவர்கள் ஒரே குடும்பத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-213)

### யாழ்...

தருவதாகத் தெரிவித்து 80 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்டுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் திருகோணமலையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

### பணம்...

காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், கைது செய்யப்பட்டவர் 24 வயதுடைய மானிப்பாயைச் சேர்ந்தவர் எனவும் ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (அ-ம-125)

### வீட்டில்...

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சபாஹர் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் பதியப்பட்டது. சிறுவனின் பெற்றோர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அந்தச் சிறுவன் பெற்றோருடன் அனுப்பிவைக்கப்பட்டான். (அ-ம-26)

### 12 பவுண்...

முதியவர்கள் இருவர் வசித்த வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ச-26)

### பதிவற்ற...

பட்டுள்ளன. நவாலியைச் சேர்ந்த இளைஞர் சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-25-125)

### நெடுந்தீவு...

நேற்றுமுன்தினம் இளைஞர் ஒருவர் நெடுந்தீவில் அடித்துக் கொல்லப்பட்டிருந்தார். அவருடைய இறுதிச் சடங்குகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே சடலத்துடன் ஊர்வலமாக வந்த பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். இந்தக் கொலையுடன் நால்வர் தொடர்புபட்டுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது. ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் நிலையில், ஏனைய மூவரும் விரைவில் கைதுசெய்யப்படவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர். (அ-ம-125-66-26)

### சுற்றிவளைப்பு...

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமை, விலைப்பட்டியல் இல்லாமை, நுகர்வோரை ஏமாற்றியமை, கட்டுப்பாட்டு விலையை விடவும் கூடுதலான விலைக்கு விற்றமை, பதுக்கியமை, இலங்கை தரநிர்ணயச் சான்றிதழ் இல்லாமை, விலையை அழித்து மாற்றியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் 383 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றின் அடிப்படையிலேயே 31 இலட்சத்து 98 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)


## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு தகுதியானவரிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- சாரதி (Driver)

மேற்படி வெற்றிடத்திற்கு தகுதியானவர்கள் எதிர்வரும் (24.06.2024) திங்கட்கிழமை, மு.ப. 9.00 - பி.ப 2.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு : 14.12.1947 உதிர்வு : 26.05.2024

கடந்த 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### துரைச்சாமி சுந்தரலிங்கம்

(பிரபல வர்த்தகர்-ஸ்ரீரங்கன் ரேடிங் கொம்பனி, மற்றும் முன்னாள் பங்காளர் நியூ விஷ்ணு ரேடிங் கொம்பனி, மகா விஷ்ணு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (25.06.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் **யாழ்ப்பாணம் இல. 37, சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (A1-ராஜா கிறீம் ஹவுஸ்)** நடைபெறும்

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

எமது குடும்பத்தலைவர் மறைந்த செய்திகேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

122, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(CS 7941) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்டது தண்ணீர் பவுஸர்



யாழ்ப்பாணம், ஜுன் 22

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் விபத்துக்குள்ளான நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பவுஸர் பத்திரிகையில் வெளிவந்த செய்திக் கமைவாக விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்லுண்டாய் வெளியில் முச்சக்கரவண்டியுடன் தண்ணீர் பவுஸர் மோதிய நிலையில் பவுஸர் சாரதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். தண்ணீர் பவுஸர் 5 தினங்களுக்கு மேலாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டமையால் பொதுமக்கள் பாதிப்படைந்தனர்.

இந்தவிடயம் பத்திரிகைச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை வாகனத்தை பரிசோதனை செய்து பொலிஸார் விடுவித்துள்ளனர்.

(ச-125)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்தி அருகாமையில்

A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (Pvt) Ltd.

077-029 4164
077-329 4130
077-294 1521

(CS/793) J-1

## விடத்தல் விநாயகர், காவாக்குளம் வைரவர் ஆலயம் வருடாந்த பொங்கல் விழா தொடர்பான அறிவித்தல்

24.06.2024 - 25.06.2024

மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் திங்கட்கிழமை 24.06.2024 விடத்தல் விநாயகர் ஆலயத்திலும் செவ்வாய்க்கிழமை 25.06.2024 காவாக்குளம் வைரவர் ஆலயத்திலும் நடைபெறவுள்ளன.

எனவே அடியார்கள் வருகைதந்து இறை அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:

புதன்கிழமை 26.06.2024 காலை 6.00 மணியளவில் ஆடு, கோழி ஏலத்தில் விடப்படும்.

தொடர்பு: 077 465 9877, 077 246 3027, 077 858 7033

ஆலய பரிபாலன சபையினர்,
தம்பிராய், பூநகரி.

(28275) (N-1)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள வீட்டிற்கு நன்கு சமைக்கத் தெரிந்த வீட்டு வேலைகளை திறம்பட செய்யக் கூடிய பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு:

077 153 2398, 077 072 5056

## மணமகள் தேவை

1986 லண்டன் PR மணமகனுக்கு மணமகள் தேவை.

சசி திருமண சேவை.

தொடர்பு :- யாழ் 077 044 3589

## விற்பனைக்கு

தகரம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு இலக்கம்

077 955 0363

## VACANCIES

Telephone Operator, Receptionist, Manager, Accounts Clerk, IT Executive, Office Admin, Data Entry Operator, Supervisor, Cash Collector.

076 098 4532, 074 083 3368

(CS/785) J-1

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 07 . 1953



மறைவு 18 . 06 . 2019

கடந்த 18.06.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

### சின்னத்தம்பி சண்முகரத்தினம்

ஆண்டுகள் ஐந்து கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.
- அப்பா உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்

"விநாயக வாசா"
கைதடி கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்.

(CS/5545) J-1

## House Needed For Rent

Seeking a fully furnished house close to the University of Jaffna for an international resident for 10 months.

077 996 3186

(CS/5543B) J-1

## Group & Personal Class

123/2, Temple Road Nallur Jaffna.

G.C.E (O/L) 2024
Science
Paper Class

By:N.Mahenthiran Sp.Trd. in Science

- அலகு ரீதியான பரீட்சைகள்
- Grade 10, 11 முழுப் பாடப்பரப்பும் மீட்டல் செய்யப்படும்.
- 10 வருட வினாத்தாள் ஆராயப்படும்.

Friday 3 - 5 pm Saturday 4 - 6 pm

Contact No - 076 343 25 21

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம் (V), 1985 இல் பிறந்த, கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட (Canadian Citizen) ரோகிணி நட்சத்திரம் உடைய விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

075 538 9986 /077 360 5714


## வீட்டின் பகுதி வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இருவர் தங்கக் கூடியதாக வீட்டின் ஒரு பகுதி. சைவ உணவு சாப்பிடுபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

076 807 9283

(CS/5544) J-1

## கமக்காரர்களுக்கு



சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (POWER SPRAYER) 20 லீற்றர் கொள்ளளவு இப்பொழுது எம்மிடம்.

மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக நீங்கள் வேலை செய்ய. அத்துடன் இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க் . என் . கம்பனி

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.